Koviloor Digital Library

3-2

ஓம்

கற்பக மலர்



4471
2, 11 (பிள்)

அன்பளிப்பு :


அருள்நெறித் திருக்கூட்டம்

கண்டவராயன்பட்டி

1981

Koviloor Digital Library

Kovilloor Digital Library





உ
சிவமயம்

கற்பக மலர் 3-2

ஆசிரியர்கள்:

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் பாலகவி
வயிநாகரம் வே. இராமநாதன் செட்டியார்

பேராசிரியர் அருட்கவி
செ. இராமசாமி, எம். ஏ.,

❋


அன்பளிப்பு:

நா. அருணாசலன்
செயலாளர்

அருள்நெறித் திருக்கூட்டம்,
கண்டவராயன்பட்டி.

மகாசதுர்த்தி
துன்மதி - ஆவணி - ௰௭   **2—9—1981**

Koviloor Digital Library



Koviloor Digital Library

3-2

ஓம்

சில வார்த்தைகள்

நமது சமயத்தின் பெருமையை உணர்ந்து செயல் படவும், சமயப்பற்றை, தெய்வ வழிபாடுகளை மேன்மேலும் உறுதிப்படுத்தி வளர்ச்சிபெறச் செய்யவும் இந்துசமய அறத்தின்பால் காணப்பெறும் அருள்நெறியையும் நல்லொழுக்கத்தையும் கூட்டு வழிபாடுகளையும் கடைப் பிடித்து நல்வாழ்வு வாழத் துணைபுரிவதற்கான சமயத் தொண்டினைப்புரியத் தமிழகத்தில் சிறந்த திருக் கோவில்களைப் பாதுகாத்து, சமயத் தொண்டாற்றும் சைவமடாதிபதிகளான மகாசந்நிதானங்களைத் துணை யாகக்கொண்டு அவர்களின் தலைமையின் கீழ் அமைந் திருப்பது **அருள்நெறித் திருக்கூட்டம்.**

இத்திருக்கூட்டம் ஆண்டுதோறும் அன்பர்கள் ஆதரவைப்பெற்று ஒருவன் தன் தாய் மொழியிலேயே வணங்க வேண்டும் என்ற கருத்துடன் தமிழ் அருச்சனை இயக்கமாகக்கொண்டு பலவழிபாட்டுப் புத்தகங்களை வெளியிட்டு வருகிறது. **பிள்ளையார்பட்டி** அருள்மிகு கற்பகப்பெருமானின் மகாசதுர்த்தியில் **விநாயக வணக்கம்** என்ற தலைப்பில் ஆண்டுதோறும் வழிபாட்டுக்குரிய பாக்களை புத்தக வடிவமாக்கிப் பக்தர்களுக்கு வழங்கிவருவது, அவன் திருவருளே!

இவ்வாண்டும் **திருவருள்** கூட்டிவைக்க இவ்வரிய புத்தகத்தை வெளியிட்டு பெருமை அடைகிறது. தமிழகத்தில் சிறந்த திருக்கோவில்கள் பல. சிவ பெருமானுக்குக் கோவில் கட்டிச் சிறப்பித்த குடும்பத்தில்

Koviloor Digital Library

தோன்றிய சித்தாந்த வித்தகரும், குருமகா சந்நிதானங்களின் அன்பிற்குப் பாத்திரமானவரும், விரிவுரை அரசு பாலகவி, என்ற சிறப்புப் பட்டங்களைப்பெற்றவரும் திருவாவடுதுறை, திருவண்ணுமலை, தருமபுர ஆதீனங்களின் வித்துவாஞக இயங்கிவருபவருமான **தத்புருஷ தேசிகர்** திரு பாலகவி இராமனுதன் செட்டியாரவர்கள் தமிழ் அருச்சனை வடிவமாக இயற்றியுள்ள **கற்பக விநாயகர் போற்றிப்பஃறெடை** என்ற 108 போற்றித் திரு அகவலும், **மூத்த பிள்ளையார்** என்ற தலைப்பில் தந்துள்ள விநாயகர் பற்றிய சிறப்புக் கட்டுரையும், சிதறு தேங்காய் என்னும் தலைப்பில் எழுதியுள்ள சிறுகுறிப்பும் இச்சிறிய நூலில் மலர்வது போற்றுதற்குரிய சிறப்பாகும்.

மேலும் தத்புருஷ தேசிகர் அவர்கள் கட்டுரையில் கூறிய 32 விநாயகமூர்த்திகளில் பிரார்த்தனையாக பாடி வணங்கக் கூடியமுறையில் ஏழு மூர்த்திகளைப்பற்றி பேராசிரியர் அருட்கவி திரு. கு. செ. இராமசாமி எம்.ஏ., அவர்கள் இயற்றியுள்ள வெண்பாக்கள் சிறந்த உயிர்க் கவிகளாக பக்தர்கள் மனதைக் கவரும் நிலையில் அமைந்திருப்பதும் பாராட்டுதற்குரியது.

இத்தகைய சிறப்புடன் இவ்வாண்டு இந்நூலை வெளியிட்டுப் பக்தர்களுக்கு வழங்குகின்றேம். பக்தர்கள் படித்துப் பயன்பெற்று நல்வாழ்வுவாழ **அருள்மிகு கற்பகப்பெருமான் திருவருள்புரிவாராக.**

நா. அருணுசலன்,
செயலாளர்,
அருள்நெறித் திருக்கூட்டம்.

கண்டவராயன்பட்டி
துர்மதி-ஆவணி-யீ

Koviloor Digital Library

பிள்ளையார்பட்டி

விநாயகரை முதன்மையாகக்கொண்ட தலங்கள் தமிழ் நாட்டில் பல இருக்கின்றன. இவற்றுள் பிள்ளையார் பட்டி பெருஞ் சிறப்புடையதாகும்.

இராமநாதபுர மாவட்டத்தில் காரைக்குடி - திருப்புத்தூர்ச் சாலையில், குன்றக்குடிக்கு அருகில் இந்த ஊர் அமைந்துள்ளது. கோயிலும் குளமுமாக ஆரவார மில்லாத அமைதியான சூழலில் இந்த ஊர் பக்தர்கள் நெஞ்சத்திற்கு இதமூட்டுவதாகத் திகழ்கிறது.

ஈக்காட்டூர், மருதங்குடி, மருதங்கூர், திருவீங்கைக்குடி என்று இந்த ஊருக்கு வேறு பெயர் களும் உள்ளன.

நரசிம்மவருமப்பல்லவனால் இந்த ஆலயம் கட்டப் பெற்றதாகக் கூறுவர். பல்லவர்காலக் கல்வெட்டுக்களை யும் இந்த ஆலயத்தில் காணலாம்.

இங்கே கோயில்கொண்டுள்ள சிவபெருமான் திருநாமங்கள் : மருதீசர் / திருவீசர். அம்பாளின் திருநாமங்கள் : சிவகாமவல்லி / வாடாமலர்மங்கை.

இவ்வாலயத்திற்கு உரிய ஏனைய பரிவார தெங்வங் களும் இங்கே சிறப்பாக விளங்குகின்றன.

இந்த ஆலயத்தின் பிரதான மூர்த்தியாகக் **கற்பக விநாயகர்** மிகக் கம்பீரமாகக் காட்சி தருகிறார்.

Koviloor Digital Library

இங்குள்ள விநாயகர் வலஞ்சுழி விநாயகர். வயிற்றை ஆசனத்தில் படியவிடாமல் அர்த்தபத்மாசனத்தில் இவர் வீற்றிருக்கிருர். அங்குச, பாசங்களை இவர் தரிக்கவில்லை. நான்கு கைகளுடையவராகவும் இவர் காட்சிதரவில்லை. வலக்கையில் மோதகத்தோடும், இடக்கையினை இடையில் பொருத்தியவராகவும் இவர் அழகாக எழுந்தருளியுள்ளார். விநாயகரின் தொன்மையான சிலாரூபமாக இதனை ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஓர் ஆண்டில் 24 சதுர்த்திவரும். ஆண்டு முழுவதும் சதுர்த்தி விரதம் அநுஷ்டித்தவர்கள் ஆவணி வளர்பிறை மகாசதுர்த்தியில் பிள்ளையார்பட்டிப் பெருமாள் சந்நிதானத்தில் தங்கள் விரதத்தைப் பூர்த்தி செய்துகொள்வர். குறிப்பாக நகரத்தார் சமூகத் தாய்மார்கள் மகாசதுர்த்தி தினத்தில் நம்பிக்கையோடு தும்பிக்கையப்பனை இங்கே வழிபாடு செய்து வருகிருர்கள்.

நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் 9 கோயில்களுள் பிள்ளையார்பட்டிக் கோயிலும் ஒன்று. இந்த ஆலயத்திற்கு நகரத்தார் குடும்பங்கள் அனேக விதமான திருப்பணிகளைச் செய்திருக்கிருர்கள்.

பிள்ளையார்பட்டிக் கோயிலில் சதுர்த்தி விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பெறும்.

- அருட்கவி. கு. **செ. இராமசாமி** எம். ஏ.,
சிவகங்கை.

Koviloor Digital Library

உ

அருள்மிகு

கற்பக விநாயக வணக்கம்



மதுர மொழிநல் உமையாள்
புதல்வன் மலர்ப்பதத்தை
முதிர நினைய வல்லார்க்கு
அரிதோ? முகில்போல்முழங்கி
அதிர நடந்திடும் யானையும்
தேரும் அதன்பின்வரும்
குதிரையும் காதம், கிழவியும்
காதம்; குலமன்னனே.

(ஔவையார்)

Koviloor Digital Library

ஸ்ரீ பால கணபதி



பால்வெள்ளை மேனி பருவயிறு; நான்குகரம்;
மேல்வெள்ளை ஆடை; விளங்குமுகம் – மால்கொள்ளும்
பாசாங் குசம்தரித்த **பால கணபதியே,**
ஈசா களைவாய் இடர்.

Koviloor Digital Library

ஸ்ரீ நர்த்தன கணபதி



ஆடச் சலியாத அம்மையப்பர் தம்மோடு
கூட நடம்புரியக் கூறினரோ ?–நாடி என்
நெஞ்சணையில் தங்கி **நிருத்த கணபதியே**
கொஞ்சம் இளைப்பாற்றிக் கொள்.

Koviloor Digital Library

ஸ்ரீ ஏரம்ப கணபதி



தேரம்பு வேண்டாச் சிவன்மைந்தா! தென்னிலங்கை
ஓரம்பில் வென்ருேன் உயர்மருகா; – **ஏரம்பா!**
கந்தனுக்கு மூத்த கணநாதா! என்முன்னே
வந்தருளு வாயே வரம்.

Koviloor Digital Library

ஸ்ரீ புவன கணபதி



எங்கும் நிறைந்தவனே ! எவ்வுயிரும் ஆனவனே !
தங்கும் வளங்கள் தருபவனே ! – பொங்குபரி
பூரணனே ! எங்கள் **புவன விநாயகனே !**
காரணனே ! நீயே கதி.

Koviloor Digital Library

ஸ்ரீ வீர கணபதி



காவியமும் தீட்டும்; கடிந்து பகைவாட்டும்;
பாவியேன் நெஞ்சில் பயம்போக்கும்; – ஓவியமாய்
வீர கணபதிநின் வெற்றிக் கரத்தினிலே
கூராய் ஒளிவீசும் கொம்பு.

Koviloor Digital Library

ஸ்ரீ சக்தி கணபதி



யார்க்கும் முதலாவாய்; யாவர்க்கும் மேலாவாய்;
யார்க்கும் துணையாய் அருள்புரிவாய்! – யார்யார்க்கும்
சக்தி கணபதியே, தாய்நீயே! என்தவமும்
சித்தி பெறக்கருணை செய்.

Koviloor Digital Library

ஸ்ரீ மகா கணபதி



முப்பழமும், சர்க்கரையும், மோதகமும், தேங்காயும்
அப்பமொடு பிட்டும் அளிக்கின்றேன்! – செப்புதுதிக்
கையால் அணைத்தும் கலந்துண்பாய்; நற்கருணை
செய்யாய் **மகாகணப தி.**

Koviloor Digital Library

பிள்ளையார்பட்டி

ஸ்ரீ உற்சவ விநாயகர்



ஆதி கணநாதன், அன்பர்குலம் இன்பமுற
வீதி உலாவந்தான்; மேதினியீர் ! – ஓதிஅவன்
சிற்றடியைக் கண்டுதொழச் சேருங்கள், வாழ்க்கையிலே
வெற்றிபெற வேண்டில் விரைந்து.

Koviloor Digital Library

உ
சிவமயம்
பாலருவாயர் துணை

மூத்த பிள்ளையார்

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகரவர்கள்
தேவகோட்டை

பரம கருணாநிதியாகிய சிவபெருமான் ஆன்ம கோடிகள் தம்மை வழிபட்டு உய்யும் பொருட்டுக் கொண்டருளும் உருவத்திருமேனிகள் பலவற்றுள் ''மூத்த பிள்ளையார்'' திருவுருவமும் ஒன்று. பிள்ளையாரைச் சிவபெருமானது திருமகனாராகக் குறிப்பது ''தந்தை மகனாகிருன்'' என்னும் பொருளையுடைய ''ஆத்மாவே புத்ரனாமாஸி'' என்னும் வேதசுருதியை வைத்தேயாகும். ''பிடியதன் உரு உமைகொள மிகுகரியது, வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர், கடிகணபதிவர அருளினன்'' என்ற ஆளுடைய பிள்ளையார் திருவாக்கு இங்கே நினைவு கூரத்தக்கது. உயிர்களை உய்தியில் நிறுத்துவதற்கு, இறைவன்கொள்ளும் கருணை, அறமும் மறமுமாகிய இரண்டு வகைகளில் இருக்கும். பாவ ஆன்மாக்கள் மறக்கருணையாலும், புண்ணியான்மாக்கள் அறக்கருணை யாலும் ஆட்கொள்ளப்பெறுவர். கஜமுகன் என்னும் அசுரன், தவ வலிமையைப் பயன்படுத்திப் பற்பல குற்றங்களைச் செய்தான். அவனை நன்னெறிப்படுத்தி ஆட்கொள்ள இறைவன், மூத்த பிள்ளையார் வடிவத்தைக் கொண்டானென்பது புராண வரலாறு.

Koviloor Digital Library

சிவபெருமானது திருக்குமாரருள் இன்னொருவராக முருகப்பெருமான் குறிக்கப்பெறுவதால் அவருக்கு முன்னே வந்த விநாயகப்பெருமான் ''மூத்த பிள்ளையார்'' என்று குறிக்கப்பெற்றார். வாதுளாகமம் தத்துவபேதப் படலம் 139வது சுலோகத்தில், ''மகேசுவரரது கண்டத்திலிருந்து கணேசர் தோன்றினா''ரென்று சொல்லப் பெற்றுள்ளது. சுப்பிரபேதாகமம், கந்தபுராணம் ஆதியவற்றில் ''கஜமுகாசுர சங்காரத்தின் பொருட்டுப் பிரணவத்திலிருந்து கணேசர் தோன்றினா''ரென்று கூறப் பெற்றுள்ளது. முன்னர்க் கூறியது பிரதம மகாசிருட்டித் தோற்றமென்றும், பின்னர்க் கூறியது அவாந்தரமகா சிருட்டித் தோற்றமென்றும் அறிந்துகொள்ள வேண்டும்.

வேதம் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானைத் தனது முதலிடைகடைகளில் பிரணவ மந்திர வாயிலாக விளக்கப்படுத்துகின்றது. பிரணவ மந்திர வடிவமே விநாயகப்பெருமான். வேதத்தின் முதலெழுத்தாகிய பிரணவமே, விநாயகருடைய சொரூபமென்பதை அவரது யானைமுகம் உணர்த்தும். ''கைவேழமுகத்தானைப் படைத்தார்போலும்'' என்பது தமிழ்மறை. ''முந்தை வேத முதலெழுத்தாகிய எந்தை'' என்பது கந்தபுராணம். பிரணவம் ஐந்து உறுப்புக்களைக் கொண்டது. ''ப்ரதமம் தாரகாகாரம் த்விதீயம் தண்டமுச்யதே, த்ருதீயம் குண்டலாகாரம், சதுர்த்தம் ஹ்யர்த்தசந்த்ரகம், பஞ்சமம் பிந்துசம்யுக்தம், ப்ரணவம் பஞ்சலக்ஷணம்'' என்பது காமிகாகமம். இதன் பொருள் ''முதலாவது நட்சத்திர வடிவம், இரண்டாவது தண்டவடிவம், மூன்றாவது வட்ட வடிவம், நான்காவது அரைச்சந்திர வடிவம், ஐந்தாவது புள்ளி வடிவம். இவை பிரணவத்தின் ஐந்து இலக்கணங்கள்'' என்பதாகும். இவை முறையே விந்து, நாதம், அகரம், உகரம், மகரம் என்று சொல்லப்பெறும்.

Koviloor Digital Library

விந்து நாதங்கள் நட்சத்திர வடிவம், தண்டவடிவங்களை யுடையன என்று காமிகாகமம் சொல்லும் இதுவே ''ஓ'' என்ற எழுத்து இது பிரணவப் பொருளாகிய விநாயகப்பெருமானது துதிக்கை போன்றது. விநாயகரைச் ''சிவபெருமானின் வேறல்லாதவர்'' என்று வேதம் கூறுகின்றது. அது ''அஸ்து சதாசிவோம்'' என்பது முதலியவற்றால் அறியப்பெறும். ''ஓங்காரத் துட்பொருளானை'' என்பது, அப்பரடிகள் திருவாக்கு

சைவர்களாகிய நமக்குப் பன்னிரண்டு திருமுறை களும் பதினான்கு சாத்திரங்களும் இரண்டு கண்களைப் போன்றவை. தோத்திர சாத்திரங்களாகிய இரண்டும் நமக்குக் கிடைப்பதற்கு நல்லருள் செய்தவர் விநாயகப் பெருமானேயாவார். திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையார், நம்பியாண்டார் நம்பிகள் வாயிலாகத் திருமுறைகளை வெளிப்படுத்தியதும், திருவெண்ணெய் நல்லூர்ப் பொல்லாப் பிள்ளையார் மெய்கண்ட தேவர் வாயிலாகச் சிவஞானபோதத்தை வெளிப்படுத்தியதும், வரலாறு கண்ட உண்மைகள்.

நம் உடம்பில் நம்மை நிமிர்த்தி நிலைநிறுத்திக் கொண்டிருப்பது முதுகந்தண்டு என்னும் உறுப்பு. இது குயத்துக்கும் குதத்துக்கும் நடுவே தொடங்கி மேல் நோக்கிச் செல்லுவது. இதன் அடிப்பகுதியான மூலா தாரத்தில் குண்டலிநிசத்தி, வட்ட வடிவமாயிருக்கும். அதன் நடுவில் முக்கோணமும், அதன் நடுவில் வ ச ஷ ஸ என்னும் நான்கு இதழ்களையுடைய தாமரைப் பூவும் அதன் நடுவில் பிரணவ மந்திரமுமிருக்கின்றது. அதில் யானைமுகம், செம்மைநிறம், அபய வரதத்திருக்கரங்கள், பாசாங்குசம் கொண்ட திருக்கரங்கள், மூஷிக வாகனம் உடையவராய் வல்லபை என்னும் சத்தியுடன் விநாயகப் பெருமான் எழுந்தருளியிருப்பார்.

Koviloor Digital Library

விநாயகப்பெருமானது திருமேனி ஞானமே வடிவானது. அவரது திருக்கரம், திருவடி முதலிய அவயவங்களும் ஞான சொரூபமே. அவரது பெருவயிறு எல்லா உலகங்களும், உயிர்களும் அவருள் அடங்கி யிருப்பதைக் காட்டுவது இவரது ஒடிந்த கொம்பு அபரஞான வடிவானது. முழுமையாகிய இடக் கொம்பு பரஞான வடிவம் அபரஞான வடிவான ஒடிந்த வலக் கொம்பு இதிகாசங்களுள் ஒன்ருகிய பாரதத்தை எழுதிய உண்மை இங்கே நினைவு கூர்தற்குரியது இவரது தாழ்செவிகள் உயிர்களுக்கு மலவேதனை தாக்காமல் காத்து வினைவெப்பத்தை நீக்குவன. எல்லா விதைகளும் முளைவிடுவதற்கும், வளருவதற்கும் பதப்படுவதற்கும் ஆதாரமாயிருக்கும் சோம சூரிய அக்கினிகளை மூன்று கண்களாக இவர் கொண்டிருக்கிருர்.

''தம்மைக் கட்டுப்படுத்துபவரும் செலுத்துபவரும் இல்லாதவர் என்பதை அவரது பாசாங்குசங்கள் உணர்த்திக் கொண்டிருக்கின்றன'' என்று சிவஞான சுவாமிகள் அருளிச் செய்கின்ருர்கள். உயிர்களாகிய யானைகள் ஆணவம் கன்மம் மாயை என்று சொல்லுகின்ற மூன்று மதங்களை உடையன. ஞானமாகிய கட்டுத்தூணை முறித்து, அன்பாகிய சங்கிலியை உதறித் திருவருளாகிய கூடத்தினின்றும் வெளிப்பட்டு, 224 புவனங்களாகிய கடிய காட்டில் ஓடி எந்தப்பாகர்க்கும் அடங்காதனவாய் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அந்த யானைகளை விடாது தொடர்ந்து பிணிக்கும் வலிமை, விநாயகப் பெருமானது அங்குச பாசங்களுக்கு உண்டு. பாசத்தைக் கொண்ட கரம் படைத்தலையும், அங்குசம் கொண்ட கரம் அழித்தலையும், அபயகரம் காத்தலையும், வரத கரம் அருளலையும், துதிக்கை மறைத்தலையும் அறிவிப்பன.

Koviloor Digital Library

பக்குவ முதிர்ச்சியினுல் சிவபுண்ணியம் நிரப்பி, இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதமுற்ற உயிர்களது பிறவி நீங்கும்படி ஞானசாரியராய் வந்து அடிமைகொள்பவர் விநாயகரே என்பதை அவரது அபயகரம் உணர்த்துகின்றது. கொடுப்பவரும் கொள்பவரும், எங்கும் நிறைந்தவரும் விநாயகரே என்பதை உணர்ந்து நாம் அவரது அடிமைகள் என்பதை அறிந்து உயிரும் உடம்பும் மற்றைப் பொருள்களும் அவரது உடைமைகள் எனக்கொண்டு அவரிடம் நாம் கொடுக்க அவர் ஏற்றுக்கொள்வது அவரது வரத கரமாகும்.

விநாயகர் பரநாத வடிவினர். எனவே பரசிவத்தின் வேருகாதவர். பரநாத பரவிந்துக்களுக்குக் கீழே உள்ள நாதம், விந்து, சாதாக்கியம், ஈச்சுரம், சுத்த வித்தை ஆகிய சிவ தத்துவ வாசிகளுக்கு அருள் வழங்க அவ்வத் தத்துவங்களிலுள்ள விநாயகமூர்த்திகளை அதிட்டித்து இவர் நிற்பார். இங்குள்ள திருக்கோயில் களில் எழுந்தருளியிருக்கும் விநாயகப்பெருமான் ஸ்ரீ கண்டருத்திரரின் திருமகனுராகப் பிரகிருதி புவனவாசிகளாகிய நமக்கு அருள் வழங்குபவரென்பதை உணர வேண்டும்.

வழிபாடு செய்யும் மெய்யடியார்களது உள்ளம் அவரவர்களின் பக்குவ நிலைகளுக்கேற்பப் பலவேறு தகுதிகளிலிருப்பதால் இறைவனும் அதற்கேற்பப் பலவேறு திருமேனிகளைத் தரித்துக்கொள்ளுகிருர். அங்ஙனம் அடியார்களுக்காக விநாயகப்பெருமான் கொள்ளும் திருவுருவங்கள் முப்பத்திரண்டு என்று ஞான நூல்கள் கூறுகின்றன. அவை முறையே 1. பாலகணபதி. 2. தருண கணபதி. 3. பக்தி கணபதி. 4. வீர கணபதி. 5. சத்தி கணபதி, 6. துவிஜ கணபதி. 7. சித்தி கணபதி.

Koviloor Digital Library

8. உச்சிஷ்ட கணபதி. 9. விக்ந கணபதி. 10. க்ஷிப்ர கணபதி. 11. ஏரம்ப கணபதி. 12. லக்ஷ்மி கணபதி. 13. மகா கணபதி. 14. விஜய கணபதி. 15. நிருத்த கணபதி 16. ஊர்த்துவ கணபதி 17. ஏகாட்சர கணபதி. 18 வர கணபதி. 19 திரயாக்ஷர கணபதி. 20. க்ஷிப்ர பிரசாத கணபதி 21. ஹரித்ர கணபதி. 22. ஏகதந்த கணபதி 23. சிருஷ்டி கணபதி 24. உத்தண்ட கணபதி. 25 ரணமோசன கணபதி. 26. துண்டி கணபதி 27. துவிமுக கணபதி. 28. திரிமுக கணபதி. 29. சிங்க கணபதி. 30. போக கணபதி 31 துர்க்கா கணபதி. 32. சங்கடஹர கணபதி என்பனவாம். இந்த முப்பத்திரண்டு மூர்த்திகளுக்கும் ஆனைமுகம், பேழைவயிறு முதலியனவும், சாங்க உபாங்க பிரத்யங்கங்களில் சிற்சில வேறுபாடுகளும் அமைந்திருக்கும்.

பிள்ளையார் வழிபாடு பாரத நாட்டில் மட்டுமன்றி ஜாவா, ஜப்பான், சைனு முதலிய மற்ற நாடுகளிலும் தொன்றுதொட்டு நிகழ்ந்து வருகின்றது பிள்ளையார் வழிபாடு, நம் பாரத நாட்டிற்கு மிகமிகச் சொந்தமானது. அதிலும் நம் தமிழ் நாட்டவர் பிள்ளையாரை வழிபட்டன்றி எதனையும் செய்ய முற்படார். வழிபாட்டுக்குரிய பிள்ளையார் திருவுருவத்தைப் பசுவின் சாணியிலும் வைத்துக்கொள்ளுகின்ற எளிமை நிலையொன்றே, அவ் வழிபாட்டின் இன்றியமையாமையை நமக்கு உணர்த்தும். இரண்டு நாட்களுக்கு மேல் வைத்திருந்தால் புழுத்துப் போகும் சாணி, பிள்ளையார் திருவுருவத்தைப் பெற்று விட்டால் எப்போதும் கெடுவதில்லை. பிள்ளையாரைப் பூசித்துப் பேறுபெருத தேவர்களோ, முனிவர்களோ, மனிதர்களோ இல்லை என்று சொல்லலாம்.

விநாயகரைப் பூசிக்கும் முறையும், வழிபடும் முறையும் பலராலும் பலவாருகக் கொள்ளப்படினும்,

Koviloor Digital Library

சிவாகம நெறிமுறைப்படி அவரைப் பூசித்து வழிபடுதலே சிறந்த பயன்தருவதாகும் முதற் கடவுளாகிய மூத்த பிள்ளையார் ''கணேசமாநகரம்'' என்னும் பிள்ளையார் பட்டியில், அன்பர்கள் வேண்டியவற்றை வேண்டியாங்கு ஈந்தருளக் கற்பகமூர்த்தியாக எழுந்தருளியிருக்கிறார். அவரது திருவடிகளை இடையருது சிந்தித்தும் வந்தித்தும் இன்புறுவோமாக.

நலமே தழைக.

குவாலிட்டி டைல்ஸ் அன் கெமிக்கல்ஸ்

விளாங்குடி விசாலாட்சி நகர், அஞ்சல்

மதுரை - 625 401.

நல்வாழ்த்து

நே. ராமசாமி,
நிர்வாகப் பங்குதார்.

தஞ்சைக்கு பெருமையளிப்பது பெரிய கோவில்
தாம்பூலத்திற்கு சிறப்பு சேர்ப்பது

''லெக்ஷ்மி சீவல்''

தயாரிப்பாளர்கள் :

சுப்ரமணியம் & கோ.,

தபால்பெட்டி எண் - 222

தஞ்சாவூர்.

Koviloor Digital Library

உ
சிவமயம்

சிதறு தேங்காய்

நம் சைவ நெறியில் இறைவனுக்கு நிவேதிக்கும் பொருள்களுள், தேங்காயும் ஒன்று. தென்னையைப் ''பூலோக கற்பக தரு'' என்று சொல்லுவார்கள். தென்னையின் சாரமாக இருப்பது, தேங்காயிலுள்ள நீர், மட்டை, ஓடு, பருப்பு ஆகிய மூன்றின் நீக்கத்தில் அந்த நீர் கிடைக்கும். உயிர்களைப்பற்றியுள்ள ஆணவன், கன்மம், மாயையாகிய மூன்றின் நீக்கத்தில், பேரின்பமாகிய திருவருளை, அவைபெறுமென இது ஒருவாறு உணர்த்தும். தேங்காயை உடைக்காமல் முழுமையாகவும், உடைத்து இரண்டு மூடிகளாகவும், உடைத்துச் சிதறும்படி செய்தும், வழிபாட்டில் பயன்படுத்துகிறோம். தேங்காயைச் சிதறும்படி உடைப்பது, நம்மைப்பற்றியுள்ள பந்த பாசங்கள் சிதறி, நல்லின்பம் சித்திக்க வேண்டுமென்னும் குறிப்பில் அமைந்ததாகும்.

- சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர்.

Koviloor Digital Library

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

கற்பக விநாயகர் போற்றிப் பஃறொடை

திருச்சிற்றம்பலம்

அகர உயிரென அமர்ந்தனை போற்றி
ஆதியும் அந்தமும் ஆவாய் போற்றி
இன்பமே என்னுடை அன்பே போற்றி
ஈறும் முதலும் இல்லாய் போற்றி
உற்றவர்க் குதவும் உத்தம போற்றி

ஊர்பேர் இலாத ஒருவ போற்றி
எண்ணெழுத் தாக இலங்குவாய் போற்றி
ஏறுயர்த் தோன்தரும் ஏந்தால் போற்றி
ஐங்கரங் கொண்ட ஐயா போற்றி
ஒப்புயர் விகந்த உத்தம போற்றி

ஓங்கா ரத்தின் உருவே போற்றி
ஔவைக் கருளும் அண்ணா போற்றி
பஃறொடை விரும்பும் பரமா போற்றி
செக்கர் மேனிச் செல்வா போற்றி
கங்கை மைந்த கணபதி போற்றி

நச்சினார்க் கினிய நாயக போற்றி
குஞ்சர முகத்துக் கோவே போற்றி
அட்ட மங்கலம் அருள்வாய் போற்றி
நண்ணினர்க் கருளும் நாதா போற்றி
சத்தொடு சித்தெனச் சார்ந்தாய் போற்றி

Koviloor Digital Library

மந்திரப் பொருளென வயங்குவாய் போற்றி
துப்பெனு மேனிச் சுடரே போற்றி
அம்மையும் அப்பனும் ஆயினை போற்றி
மெய்யடி யாருளம் மேவுவாய் போற்றி
சர்ப்பா பரணம் தாங்குவாய் பொற்றி

சொல்பொருள் ஆகத் துலங்குவாய் போற்றி
அவ்வுடன் உவ்மவ் ஆவாய் போற்றி
எழ்தலம் பரவும் இறைவா போற்றி
உள்ளுவார் உள்ளத் துறைவாய் போற்றி
கற்றவர் விழுங்கும் கனியே போற்றி

என்னையும் ஆண்டருள் ஈசா போற்றி
கற்பக விநாயகக் கடவுள் போற்றி
காவிரி நதிதரும் கற்பகம் போற்றி
கிளிமொழி வல்லபை கேள்வ போற்றி
கீதம் இசைப்பவர் காதல போற்றி

குற்றம் பொறுத்தருள் கோவே போற்றி
கூரிய அங்குசம் கொண்டாய் போற்றி
கெடுமதி தாக்கா தடுபவ பொற்றி
கேவலம் தொட்டுக் காவல போற்றி
கைகுவிப் போரைக் காப்பாய் போற்றி

கொங்கண முனிமனக் குறியே போற்றி
கோரக்கர் உவக்கும் கோவே போற்றி
கௌரிசேய் ஆகிய சுண்ணே போற்றி
சகத்திர நாமச் சாமி போற்றி
சார்ந்தவர்ப் புரக்கும் தயாநிதி போற்றி

Koviloor Digital Library

சிந்துர மேனிச் செல்வா போற்றி
சீதரன் பரவும் சீல போற்றி
சுகபலை வெண்பூச் சூடுவாய் போற்றி
சூல பாணியின் தோன்றல் போற்றி
செல்வம் வழங்கும் திருவே போற்றி

சேவையை ஏற்றருள் செய்வாய் போற்றி
சைவர் வணங்குமெய்த் தெய்வம் போற்றி
சொற்றுணை வேதிய சுந்தர போற்றி
சோபனம் அருளும் சோதி போற்றி
சௌசம் வழங்கும் சங்கர போற்றி

ஞான பரனே நாயக போற்றி
ஞேயர் காணும் நீதி போற்றி
தத்துவம் கடந்த தனிமுதல் போற்றி
தானே தனக்குத் தலைவ போற்றி
திருகற் சிந்தையைத் திருத்துவாய் போற்றி

தீவினை தீர்க்கும் தேவே போற்றி
துதிக்கைக் கருளும் துதிக்கை போற்றி
தூய மேனிச் சுடரே போற்றி
தெய்வ நாயகத் திருவே போற்றி
தேவர்கள் பரவும் செல்வா போற்றி

தைரியம் வழங்கும் சயம்பு போற்றி
தொந்தம் தொலைத்தருள் தூயோய் போற்றி
தோன்றாத் துணையாம் ஆன்றோய் போற்றி
நன்மை வழங்கும் நாதா போற்றி
நாகக் கச்சு நயப்பாய் போற்றி

Koviloor Digital Library

நிகமா கமஞ்சொலும் நேயா போற்றி
நீதி நெறியருள் நித்தா போற்றி
நுண்ணியர் தேடும் அண்ணல் போற்றி
நூலறி வறியா மேலவ போற்றி
நெக்குறு வார்பால் புக்கவ போற்றி

நேயம் பூண்டோர் தாயக போற்றி
நைந்துளம் நெகிழ்வோர் நட்பே போற்றி
நொய்யதின் நொய்ய நுண்மை போற்றி
நோய்தீர்த் தாளும் தாயே போற்றி
பக்குவர்க் கருளும் முக்கணா போற்றி

பாதி மதியணி சோதி போற்றி
பின்பும் முன்பும் பேணுவை போற்றி
பீடுகொள் மூடிகம் நாடினை போற்றி
புலவர் நாவில் பொருந்துவாய் போற்றி
பூநா மகளிரைப் பொருத்துவாய் போற்றி

பெண்ணாண் அலியென நண்ணுவாய் போற்றி
பேதைமை அகற்றும் நாதனே போற்றி
பைரவன் முன்வரும் பார்த்திபன் போற்றி
பொய்கடிந் தாருளம் பொருந்துவாய் போற்றி
போதகற் செற்ற போதகம் போற்றி

மின்னையொத் தொளிரும் மன்னவ போற்றி
மீகாம னாக விளங்குவை போற்றி
மருதங் குடிவளர் மாமணி போற்றி
மாதவர் சிந்தை வாழ்வாய் போற்றி
முன்னொன் றில்லா முதல்வா போற்றி

Koviloor Digital Library

மூவா தொளிரும் மூர்த்தி போற்றி
மெய்யர் காணும் மெய்யே போற்றி
மேதினி தழைக்க விளங்குவாய் போற்றி
மைவிழிச் சித்தியின் மணாள போற்றி
மொய்குழற் புத்திசேர் மூர்த்தி போற்றி

மோதகம் தாங்கிய முன்னவ போற்றி
வளமெலாம் அருளும் வள்ளால் போற்றி
வாடா மலர்த்தாய் மைந்தா போற்றி
வியக்கும் திருவுரு மேவினை போற்றி
வீடுபே றளிக்கும் வித்தகா போற்றி

வெள்ளிமால் வரையை விரும்புவாய் போற்றி
வேதமும் காணு விமலா போற்றி
வையகம் காண வந்தாய் போற்றி

திருச்சிற்றம்பலம்

- சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர்.

*

Koviloor Digital Library

பிள்ளையார் சுழி

எதையும் எழுதத் துவங்குவோர் தாம் மேற்கொள்ளும் செயல் செம்மையாக முடியவேண்டும் என்பதற்குப் பிள்ளையாரின் துணைவேண்டி இச் சுழியினைப் போடுகிறார்கள். பிள்ளையாரின் வடிவம் ஓங்கார வடிவம். அந்த ஓங்கார எழுத்து மருவிப் பிள்ளையார் சுழியாயிற்று என்பர் சிலர்.

ஒலிவடிவமும் வரிவடிவமும் சேர்ந்து எழுத்தாகிறது. ஒலி வடிவைக் குறிப்பது வட்டம் '0' வரிவடிவைக் குறிப்பது கோடு — இந்த இரண்டும் சேர்ந்துதான் பிள்ளையார் சுழியாயிற்று வ. ஒலிவடிவம் 'நாதம்' என்றும் வரிவடிவம் 'விந்து' என்றும் சொல்லுவர்ர்கள். உயிரும் உலகமும் உண்டாக இவ்விரண்டும் வேண்டும். இந்த எண்ணங்களெல்லாம் சேர்ந்து உள்ளத்தை அசைக்க உள்ளம் நம்முடைய கையை அசைக்க உருவாவதுதான் பிள்ளையார் சுழி.

பலவகைக் கருத்துக்கள் நிலவியபோதிலும் எழுத்துப் பணி முட்டின்றி முடியக் 'கடவுளை வேண்டி' அஃதாவது சக்தியையும் சிவனையும் வேண்டி இடப்படுவது 'பிள்ளையார் சுழி' ஆகும்.

ஏன் குட்டிக்கொள்ளுகிறோம்?

பிள்ளையார் திருமுன் நின்று வணங்கும்போது இரண்டு கைகளாலும் தலையில் குட்டிக்கொள்ளுகிறோம். ஏன்?

Koviloor Digital Library

வடக்கேயிருந்து ஒருநாள் அகத்தியர் தம்முடைய கமண்டலத்தில் கங்கை ஆற்றுநீரை அடைத்துக்கொண்டு தெற்கே வந்தார். குடகு மலேயில் அமர்ந்து கமண்டலத்தைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு சிவபூசை செய்து கொண்டிருந்தார்.

அந்த நேரத்தில் இந்திரன் சீகாழியில் மறைந்திருந்து பூசை செய்துகொண்டிருந்தான். நெடுநாள் மழையில்லாமையால் பூசைக்குப் பூ கிடைக்கவில்லே. இதற்கு என்ன செய்வது என்று இந்திரன் கலங்கினன். அப்போது அங்கு வந்த நாரதர், அகத்திய முனிவருடைய கமண்டலத்திலிருக்கும் நீரை வெளியில் பாயும்படி செய்தால் நந்தவனம் செழிக்கும் என்றுர்.

உடனே இந்திரன் பிள்ளேயாரை வழிபட்டு அகத்தியரின் கமண்டல நீரை வெளியேற்றும்படி வேண்டினன். பிள்ளேயார் காக்கை வடிவில் சென்று கமண்டலத்தின்மீது அமர்ந்தார். அகத்தியர் காக்கையைக் கையசைத்து விரட்டினர். காக்கை கமண்டலத்தைக் காலால் உந்திவிட்டுப் பறந்தது. கமண்டலம் கவிழ்ந்தது. கமண்டலநீர் காவிரியாகப் பெருக்கெடுத்தது.

அகத்தியர் காக்கையைக்கண்டு சீறினர். காக்கை ஒரு சிறுவனுக உருமாறி நின்றது. சிறுவனே இரண்டு கைகளாலும் தலேயில் குட்ட ஓடினர் அகத்தியர் சிறுவனும் ஓடினன். அகத்தியர் மேலும் விரட்டிக் கொண்டே ஓடினர். பிள்ளேயார் தம் உண்மை வடிவைக் காட்டவே, திகைத்துவிட்டார் அகத்தியர். பின்னர் அவர் பிள்ளேயாரை வணங்கி, 'ஓங்காரப் பொருளே, உன்னேச் சிறுவன் என்று கருதிக் குட்டவந்த நானே சிறுவன்' என்று சொல்லித் தம் தலேயில் குட்டிக்கொண்டார்.

Koviloor Digital Library

பிள்ளையார், 'அன்பனே இன்று முதல் எம்திருமுன் பக்தியுடன் நின்று தம் தலையில் குட்டிக்கொள்வோர் கூரிய அறிவும், சீரிய செல்வமும் பெற்று வாழ்வர்' என்றார். அதுமுதல் ஏற்பட்டதுதான் இந்தக் குட்டிக் கொள்ளும் வணக்கமுறை.



தோப்புக்கரணம் ஏன்?

எடுத்த செயல் நிறைவேறவேண்டி, பிள்ளையார் முன் இரு காதுகளையும் இரு கைகளாலும் மாறிப் பிடித்துக்கொண்டு வணங்கித் தோப்புக்கரணம் போடுவது ஏன் தெரியுமா? கதையைப் படியுங்கள்.

'கயமுகன்' என்னும் ஆனைமுக அசுரன் தவம் செய்து சிவபெருமானிடம் பல வரங்களைப் பெற்றான். அதனால் இந்திரன், பிரமன் மற்றுமுள்ள தேவர்களை யெல்லாம் படாத பாடு படுத்திக்கொண்டிருந்தான். காலை-உச்சி-மாலை-ஆகிய மூன்று வேளைகளிலும் இந்தத் தேவர்கள் தன்முன் வந்து தோப்புக்கரணம் போட வேண்டும் என்று ஆணையிட்டிருந்தான்.

இந்தத் தொல்லை பொறுக்க முடியாத தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட்டார்கள். சிவபெருமான் ஆனைமுக அசுரனை அடக்கி, தேவர்களுக்குத் தண்ணருள் புரியும்படி பிள்ளையாருக்குக் கட்டளையிட்டார். பிள்ளையாரும் அந்த அசுரனைக் கொல்லத் தம் பூத கணங்களுடன் போருக்குப் புறப்பட்டார்.

Koviloor Digital Library

போர் கடுமையாக நடைபெற்றது. கயமுகன் சாகா வரம் பெற்றவனுதலால் அவனை எளிதில் கொல்ல முடியவில்லை. பார்த்தார் பிள்ளையார்; தம்முடைய வலக்கொம்பை ஒடித்தார். சில மந்திரங்களை உச்சரித்து அவன்மீது ஏவினுர். அக்கொம்பு அவனுடைய உடலைப் பிளந்தது ஆயினும் அவன் சாகவில்லை. பெருச்சாளியின் வடிவெடுத்து வந்து மீண்டும் எதிர்த்தான்

இனி இவனைக் கொல்ல முடியாது; மெய்யறிவு புகட்டிக் கருணை புரிவோம் என எண்ணி விநாயகர் அவனுக்கு அருள் புரிந்தார். அவனும் அறிவு திருந்தப் பெற்றுன். ஐயனே! யான் உமக்கு அடிமை' என அடிபணிந்தான். பெருச்சாளி வடிவில் இருந்த அவன் அகந்தை அடங்கியமையால் அவனைத் தமக்கு ஊர்தியாகக் கொண்டார் பிள்ளையார்.

தேவர்கள் மகிழ்ந்தனர். பிள்ளையாரை வணங்கி அருள்செய்ய வேண்டினர். தாங்கள் அசுரனுக்குத் தோப்புக்கரணம் இட்டதுபோல 1008 முறை தோப்புக் கரணம் போட்டனர். அது கண்ட பிள்ளையார் 'அவ்வளவு தோப்புக்கரணம் போட வேண்டியதில்லை. மூன்று முறை போட்டால் போதும்' என்று கூறினுர். இதனுலேயே தோப்புக் கரணம் போடுவது வழக்கமாயிற்று.

உருவின் தத்துவம்

யானைத் தலையும் பெருவயிறும் மனித உடலும் ஐந்து கைகளும் கூடிய ஒரு விந்தையான வடிவம் பிள்ளையார் வடிவம்.

Koviloor Digital Library

பிள்ளையாருக்கு இடையின் கீழே மனித உடம்பு, இடைக்கு மேல் கழுத்து வரை தேவ உடம்பு; மேலே விலங்கின் தலை; ஒரு கொம்பு ஆண் தன்மையையும் மற்ருென்று பெண் தன்மையையும் குறிக்கும். யானைத் தலை அஃறிணை; தெய்வ உடம்பு உயர்திணை. இவற்றை உற்றுநோக்கி ஆராய்ந்தால் பிள்ளையார் தேவராய் — மனிதயராய் — விலங்காய் — ஆணய் — பெண்ணய் — உயர்திணையாய் — அஃறிணையாய் விளங்குகிருர் என்ற உண்மை புலப்படும்.

உலகமனைத்தையும் தம்முள் அடக்கியிருப்பவர் என்பதைக் குறிக்கவே அவருக்குப் பெருவயிறு அமைந் திருக்கிறது துதிக்கை வலப்புறம் திரும்பி இருந்தல் வலம்புரி விநாயகர் என்பதைக் குறிக்கும்

ஐந்து திருக்கைகள்!

கும்பம் ஏந்திய கை ஆக்குந் தொழிலையும், மோதகம் ஏந்திய கை காத்தல் தொழிலையும், அங்குசம் ஏந்திய கை அழித்தல் தொழிலையும், பாசம் ஏந்திய கை மறைத்தல் தொழிலையும், தந்தம் ஏந்திய கை அருளல் தொழிலையும் புரிகின்றன. இப்படியாக ஐந்தொழில் புரிந்து உயிர்களுக்கு அருள் புரிகின்ருர் விநாயகர் என்பதைக் காட்டவே விநாயகருக்கு ஐந்து திருக்கைகள் அமைந்துள்ளன.

Koviloor Digital Library

விநாயகர் என்ற சொல்லுக்குச் 'சிறந்த தலைவர்' என்பது பொருள். 'வி' என்றால் சிறப்பு. 'நாயகர்' என்றால் தலைவர் என்பது பொருள்; இரண்டும் சேர்ந்து 'விநாயகர்' ஆயிற்று.

விநாயகருக்குப் பிடித்தமான பண்டங்கள் :

மோதகம், அப்பம், அவல், பொரி, கடலை, கரும்பு, மா-பலா-வாழைப் பழங்கள், நாவற்பழம், விளாங்கனி, தேங்காய், இளநீர், அவரை, துவரை, சுண்டல், சுழியம், பிட்டு, பொங்கல், எள்ளுருண்டை, வடை, பாயசம், அப்பளம், தேன், கற்கண்டு, சர்க்கரை, தினைமாவு, பால், பாகு முதலியன.

